

ஓலை 97| ஓசை 220| நவம்பர் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு

## பொருள்

மறந்தும் பிறர்க்குத் தீமை செய்ய எண்ணாதே; எண்ணினால், எண்ணியவனுக்கு அறக்கடவுளே தீமையைத் தர எண்ணும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஔவை மொழியில் அமுதப் பாக்கள்

## கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை!

பாவகை : எழுசீர் மண்டிலம்;
ஆறு மா, ஒரு காய்

வானக் கற்பே நீல வண்ணம்;
வகையாய் அதனின் அறமாகும்.
வான வில்லில் வண்ணம்
ஏழே வான வில்லின் திறனாகும்;
வான மேகம் கொட்டும் மழையே
வான முகிலின் அறத்திறனாம்;
ஆன வரையில் அவைகள் போன்றே
அவரவர் கற்பில் வேண்டுமன்றோ!




நிலவின் கற்பே நிலத்தில் ஒளியை
நிலைக்க இரவில் பொழிதலறம்:
நிலவைப் போல பகலில் கதிரை
நீள வைத்தல் கதிரறனாம்;
அலவும் இன்றி ஆழி நிறைந்தே
அணைத்து யிர்வாழ் அறக்கற்பே;
பலவும் இயற்கை புகட்டும் பாடம்
படித்து மாந்தா கற்பொழுகும்!

செல்வம் உடமை சேர்க்க வேண்டி
சீர்மை புதைத்து மனக்கற்பை
எல்லாம் இழந்தே பிழைத்தே உயிர்த்தல்,
எளிய புழுவின் கீழ்மைமேலாம்;
வல்லோன் நானே என்றே தீமை
வகையாய்ப் புரிதல் கற்பாகா:
நல்ல எண்ணம் செய்கை நாட்டோர்
நலத்தை நாடல் அறக்கற்பே!




**இலக்கணக் குறிப்பு:**

ஈரசையில் மாச் சீர்கள் ஆறு வந்து ஈற்றுச் சீர் காய்ச்சீரில் முடியும். ஓரடிக்கு எழு சீராகும். நான்கடிகள் வரும். நான்கடிகளை முதல் வரியில் நான்கு சீர்கள் வந்து, இரண்டாம் வரியில் மூன்று சீர்கள் வரும். இரண்டாம் வரியை மடக்கி இந்த வரி முதலடியின் தொடர்ச்சி என்பதைக் குறிப்பதற்காக உள்ளே தள்ளி எழுத வேண்டும். இப்படி எழுதுவதால் எட்டு வரிகள் ஒரு பாட்டாகும். நான்கடிக்கும் ஓரெதுகை பெற்று, ஒவ்வொரு அடியின் முதல் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை அமையும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

**வேலையிழந்த மென்பொறியாளர் இல்லம்**
**திரும்பும் பாதையில்**
**மின்கம்பத்திலேறும் கொடி.**



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# கஸலும் நானும்

இப்போதெல்லாம்
வானவில்லை
நான் இரசிப்பதில்லை
அரிதாயேனும்
உன்னைக் காண்பதால்
என்னுள் வானவில்லின் அழகு
தோற்றுப் போனது

உன் மூச்சுக்காற்றை
உயிர் மூச்சாய்
சுவாசிக்கிறேன்.
தயவுசெய்து
இடையில் நிறுத்தி விடாதே
என் சுவாசமும் நின்று போகும்

காதல் வலையை
நீ தான் விரித்தாய்
மீளமுடியாமல்
சிக்கித்தவிக்கிறேன்
நீயோ ஓயாமல்
இடம் மாறி வலை வீசுகிறாய்
பாவம் மீன்கள்.

நான் தனிமையை
வெகுவாகக் காதலிக்கிறேன்
உன்னைக் காதலித்ததற்காய்
எனக்கு
இறைவன் தந்த பரிசு.

நான் தினமும்
உன்னையே எண்ணி
உருகுகின்றேன்
மெழுகுத்திரியாய்
நீயானால்
வேறெங்கோ
விளக்காய் அல்லவா
ஒளிர்கிறாய்



உனக்குத் தெரியுமா
கண்ட பின்புதான்
நான் கூட
தமிழை நேசிக்கிறேன்
பிரிந்து செல்லாதே
என் தமிழ்
முகவரி தெரியாமல்
இறந்துவிடும்.

மின்னி ஒளிரும்
விண்மீன்கள்
கூட கண்ணுக்குத்
தெரியவில்லை
நாள் முழுதும்
சூரியனாய்
என் வானில்
நீ உலா வருகிறாய்.

என் பேனா முனைகள்
இளைப்பாறுகின்றன
எஞ்சியிருக்கும்
வெற்றுக் காகிதங்கள்
காற்றில் பறக்கின்றன
என் எழுத்துகளை
நேசித்த நீ
வாசிக்கத் தவறியதால்.

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆய்ஷ், கம்பளை

# தலைவன் அந்தாதி

## (தன்முனை இயைபு கவிதை அந்தாதி)

தன்னிகரற்ற ஒருவன்
தலைமை வேண்டும்
தலைமுறைக்கும் பணியும்
அடிமைத்தனம் வேண்டாம்
□
வேண்டாம் பொய்யுரையை
புனைவர் சகவாசம்
உண்மையை உணர்ந்தவர்
இயம்புவதே மெய்யுரை
□
மெய்யறிவாளரின் நல்லுணர்வு
உணர்ந்து ஏற்றுவோம்
அவரை புகழ்ந்து
பரிந்து போற்றுவோம்
□
போற்றியே வாழ்
செவ்வியர் சிறப்பு
சிறந்ததே ஆனாலும்
சிந்தையில் வளர்
□
வளரும் பெருமை
வளர்க்கும் வளமை
ஆளும் தலைவன்
ஆவான் அவன் தன்னிகரற்றவன்.



கவிஞர் ஸ்ரீகலா விஸ்வநாதன்

# நேரிசை வெண்பா

செல்விருந் தோம்பி சிறப்பினைச் செய்திட்டு
இல்லிலே நாளுமே காத்திருப்பு-நல்லதோர்
உண்டியை அட்டே உயர்வுடன் தந்திடும்
உண்டிகை என்றும் உரம்.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# இடுக்கு

அன்றொரு
பெருமழை நாளில்.
மின்னல் வெட்டு
வெளிச்சம்
பார்த்ததோடு சரி.



அண்டம் நிரப்பும்
சூரியச் சாளரம்
இன்னும்
முழுதாய் பார்க்கவில்லை.

இருள் கவிழ்ந்த
அந்தப் பெரும் பாறையின்
இடுக்கு.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஏட்டினில் எழுதினேன் காற்றினில் வந்ததோ

தென்றலிடம்
கேட்டேன்
பதிலுரைக்க
திணறியதே

நந்தவனத்தை தீண்டிய
சுகந்தக் காற்றும்

ஊமைச் சிரிப்பில்
எக்களித்தே
கடந்ததே.



அலையின்
விளிம்பில்
பாதம் நனைத்தே

கிசுகிசுத்தேன்.
திரும்ப உள்வாங்கி
ஒளிந்ததே.

உலவும்
வெப்ப ஈரத்திடம்
உள்ளத்தைச் சொல்ல
தலை குனிந்தே
ஓரமானதே.

மையிட்ட விழியினைத்
தாங்கிய தேவதையிடம்.

எண்ணமதை
எடுத்துரைப்பார்
யாரோ ?
மனம்
நொந்தேனே.

எண்ணமதே காது மடல்களில்
கவினுறக் கேட்டாயோ.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# பழைமை

## அதிகாரம் : 81

பழகியோர் உரிமைத்தொடர்பை
எள்ளளவும் சிதைக்காது.
அழகாய் பாதுகாத்தலே
பழைமை எனப்படுமாம்.

நெருங்கப் பொருந்தும்
உரிமையே நட்பினுறுப்பாம்.
அவ்வுரிமைக் குட்பட்டோராதலே
சான்றோர் கடமையாம்.

நண்பனின் உரிமைச்செயலை
தன்னதாய் கருதாவிடின்.
நெடுங்கால நட்பாடலால்
என்ன பயனுமில.

உரிமையொ டொருசெயலை
அனுமதியின்றி செய்திடினும்.
அதைப்போற்றி நட்பாடி
நண்பரோடிருப்பர் அறிஞர்.

விரும்பத்தகா செயலொன்றை
உரிமையோடு செய்திடின்.
அஃதுநட்பின் அறியாமையோ
மிகுஉரிமையோவென கொளல்நலம்.

உரிமையின் எல்லையில்
தொல்லைகளானாலும் அந்நட்பை.
தொலைதூரம் சென்றிடினும்
கைவிடார் நல்நண்பர்.



பழைமை

தொன்றுதொட்ட அன்புடைநட்பு
அழிவுவருங்காலும் அழியாது.
நட்பினன்பு நீங்காது
முடிவுகாலமட்டும் நிலைக்கும்.

நண்பர்செய் குற்றங்களை
நாலுபேர் சொல்லியுங்கேளாது.
நட்பாடல் புரிவோர்க்கஃது
நட்பின் பயனுடைநாளே.

நட்புரிமை கெடாது
தொன்றுதொட்டு பழகும்.
நண்பர்களின் நட்பாடற்பண்பை
நானிலமும் விரும்பிப்போற்றும்.

தவறிழைத்து ஒதுங்கிடினும்
முந்நாள் நண்பரிடத்து.
பண்புமாறா நட்பாடல்புரிவோரை
பகைவரும் போற்றுவர்.


கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

**கடவுள் வாழ்த்து**

''முதலா வுலகமொரு மூன்றுமேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னினெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்மன்றே .''

பொருள்:

மூன்று உலகைக் காக்கும் வானவன் ( தெய்வம் )
சிறந்த நிதியை உடைய செல்வன்
பறந்த மக்களை இன்பமாய் காப்பவனை
இவ்விலக்கியம் இனிதே முடிய வணங்குகிறேன்




**1. நாமகள் இலம்பகம் .**

எல்லா வளமும் மிக்க நாடு
இல்லாததே இல்லாத பெருமை நாடு
வெல்ல முடியாத பகையில்லா நாடு
உல்லாச பெண்கள் வாழும் ஏமாங்கத நாடு
பெண்கள் மதுவை வார்த்தலால் சிந்த
ஆண்கள் குடிபோதையில் தள்ளாட
மண்ணில் சிந்திய மதுவை உண்டு
மயங்கிய அன்னம் நாரையைக் கூடும்

கரும்பைஆலையில் சாறு கொள்வோர்
விரும்பி அருந்த மீதியை காய்ச்சுவதால்
கரும்புகை விண்ணில் மேகமாக தவழ
பரிதியின் முகம் சிவப்பதைக் காணலாம்

கண்வலையால் காமத்தை ஊட்டும்
பெண்ணை அணுகாது எட்டி நிற்கும்
முனிவரின் தவப்பயன் பெற்ற
நாட்டின் தலைநகரம் இராசமாபுரம்

ஒத்த கோபுரங்கள் விண்ணை முட்ட
சத்தமாக கதவு மணிகள் முழங்க
முத்து மாலைகள் மார்பில் ஒளிர
திருமாலின் அருள் பெற்ற நகரம்

சத்தியம் பேசும் மக்கள் வாழ்கிறார்கள்
நித்தம் தன் கடமை தவறாதவர்கள்
தத்துவ தவசிகள் நிறைந்த நகரம்
இத்தகைய நகரத்தின் அரசன் சச்சந்தன்.

சச்சந்தன் வறுமை நீக்கிய வள்ளல்
அச்சம் அறியாத மாவீரன்
துச்சரிதம் இல்லாத தர்ம சீலன் (தீயொழுக்கம்)
இவ்வுலகம் அவன் அன்பில் களிப்புறறது

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# நினைவின் உயிரெழுத்து அம்மா

தெரிந்த நாளிலிருந்து இன்றுவரை
எத்தனைப் பேரழகி என் தாய்
எவ்வளவு வலி துயரத்தை புன்னகையில்
பூட்டிவிட்டாள் போற போக்கி வழியெங்கும்.

எண்ணற்ற அழகான இளமைப் பருவம்
இமை மூடும் போதெல்லாம் தலையணையாய்

எது வேண்டுமென்று சொன்னால் போதும்
உள் பொதிந்து நேரத்தில் வெளிக்காட்டும்
திறன் மிக்க கண்கவரும் கணிப்பொறி
இன்றும் ஆச்சரியக்குறி அம்மா நீயே!

இப்ப அம்மா புள்ளி வைத்த
இடமெல்லாம் பூத்துக் குலுங்கும் பூந்தோட்டமாய்
தலைசீவி பள்ளிக்கு அனுப்பிய நாட்கள்
நான் தலைசீவி அலுவலகத்துக்கு செல்லும்போது

சன்னல் இருக்கை கிடைத்தது பேருந்தில்
எதேச்சையாக பெய்த சாரல் மழை
போருக்குப் புறப்பட்ட என் இதயத்தை
இழுத்துக்கட்டி அமர வைத்தது சாரக்காற்று

மெல்ல என் தலை கோதியவாறு
என் சிறகுகள் சிலிர்த்தது சற்றென்று
திரும்பி பார்த்தேன் ஓவியத்தில் நான்
கதவில் இருந்த கண்ணாடி சொல்லியது.

நீ சபிக்கப்பட்ட சொற்களில் இருந்து
என் புத்தகம் எங்கும் நிறைந்தன
வண்ண ஓவியங்களில் பல கவிதைகள்.

நீ முத்தமிட்ட சொற்களில் -இன்று
என் புத்தகம் எங்கும் நிறைந்தன
இன்னும் படிக்க முடியாத
ஆயிரம் கவிதைகள் உன்னுள்.



கவிஞர் தே. செ. பிரகாஷ், செஞ்சி

# கத்தாழங் காட்டு வழி



சொல்லாமக் கொல்லுறயே சொக்கவச்ச மன்மதனே!
முள்ள முழுங்க வச்சு மூச்சு முட்ட செஞ்சவனே!
கண்ணு உறங்கலயே நெஞ்சு நெறயலயே
காலம் போலக் கரையுறனே மச்சானே!-சுத்தும்
காத்தப் போல அலையுறனே மச்சானே!

பாய விரிச்சுவச்சு ஆசயத் தூங்க வச்சேன்
உசிரு மட்டும் உன்னத் தேடி அலயுது
நோய் ஏதுமில்ல பாயில படுத்ததில்ல
உடம்பு மட்டும் உச்சிவெயிலாக் கொதிக்குது
எங்கிருக்க எங்கிருக்க என்னத் தேடி வருவாயா
இங்கிருக்கு இங்கிருக்கு உசிரக் கூட்டிப் போவாயா
ஆனந்தக் கூத்துக்குள்ள ஆசயும் வேகுது
ஏனிந்த ராத்திரி இதயத்த எரிக்குது
மயக்கி என்னக் கொன்னவனே மன்மதனே சொல்லாயோ?

வழியப் பாத்துப் பாத்து வேத்துக் கொட்டியாச்சு
நெஞ்சுக்கூடு ஒன்னத்தான தேடுது
ஊரு முழுக்கப் பேசு பொறனி கேட்டுக் கேட்டு
காது ரெண்டும் கேக்காமத்தா போச்சுது
என்ன செய்ய என்ன செய்ய என்னக் கொண்டு போனவனே
இத்துப்போன ஊட்டுக்குள்ள கோட்ட கட்டி வச்சவனே
கனவுல வந்தது மூச்சுக்குத் தெரியல
காரணம் நீயென மனசுக்குப் புரியல
உசுரக் கொத்திச் சமச்சவனே ஒடம்பத் தூக்கிப் போட்டாயா?

(காதலைச் சொல்லிவிட்டு காணாமல் போன காதலனைத் தேடும் கிராமத்துக்குயிலின் தவிப்பு)

கவிஞர் இளையவன் சிவா

# படக்கவிதை

நீண்ட நெடிய
பயணத்தின் முடிவில்
இரு பறவைகள் மட்டும்
இதுவரை
இலக்குக்கு வந்து அமரவில்லை
அது வரும் வரை
வானத்தில்
மேகங்களின் நகர்வையோ
தேக்கத்தில்
நீரின் போக்கையோ
கவனித்துவிடவாப் போகிறது
கவலைப் பறவைகள்



கவிஞர் ஆதின் ஆரா, அருப்புக்கோட்டை

# வளம் குன்றி நீற்க

செறுநர் அறுத்த வேளாண் நிலம்
பொருநர் முற்றம் முறித்து வானூர்தி
களம் அமைக்கும் கயவர்.
நெற்கழனி அழித்து தீரா இன்னா
இழைக்கும் இன்னார் படை
மேழியர் கெழு முறித்து கேடு
விளைவிக்கும் கேழற் கொடியோன்.
வறியோர் வறுமை தீர்க்கும் மல்லன் மூதூர்
வளம் குன்றி நிற்க.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# உன் நினைவு

நீ நினைப்பது போல்,
நான் உன்னை மறப்பது.
அவ்வளவு எளிதல்ல.
எளிதல்ல.
நான் உன்னை
மறந்தாக வேண்டும் என்றால்,
இறந்தாக வேண்டும்.
இறந்து மறக்கவா? அல்லது
மறந்து இறக்கவா?
நீயே சொல்.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# மௌன ராகம்

சுமையில்லாத சுகங்களும்
சுமக்காத நாளில்லை

வானத்து சுவரிலே
அன்னார்ந்து பார்க்கையிலே

ஊர்ந்து செல்லுமாம்
ஊமையின் காதலும்.



கவிஞர் ஜி. தேவராஜ், சென்னை

# ஆயுதம்

பொறுமை எனும் பலமே
வலிமை வாய்ந்த ஆயுதம்

அனுபவம் எனும் பலமே
சாதனை படைக்க ஆயுதம்

உணர்வு நிறைந்த இதயமே
உறவுகளை வெல்லும் ஆயுதம்

நம்பிக்கை நிறைந்த முயற்சியே
வெற்றியை வெல்லும் ஆயுதம்

இவை அனைத்தையும்
வெல்லும் ஆயுதம்



இறை நம்பிக்கை
பிரார்த்தனை என்னும் ஆயுதம்!

கவிஞர் ஜெ. தேவி ராஜசேகர், சென்னை செங்கல்பட்டு மாவட்டம்

# தவிப்பு

அன்னவாய் உண்ணயிலே
அண்ணம் வந்து தடுக்கையிலே
அண்டை நாடு சென்ற மகன்
அள்ளி வளர்த்த ஆசை மகன்
எள்ளளவும் ஊண் அதனை உண்டானா
என எண்ணத்திலே உயிராய் ஊறும்
ஏக்கத்தின் உருகல் தான்
தவிப்பதனின் பிரதிபலிப்போ

கட்டழகு ஓவியத்தை
கற்பழகு சித்திரத்தை
காதல் செய்யும் கலையுடனே
கடிதம் தனை தூதுரைத்து
கருத்துக்காய் காத்திருக்கும்
காதலனின் கலக்கம் தானோ
காதல் செய்யும் கமகத்தின்
தவிப்பெனும் தழல் வடிவோ



மகப்பேற்று அறையினிலே
மழலை தனிலே புறமெடுக்க
மனைவி தனையே புக விட்டு
மறைவாசல் வெளியரும்பி
மண்டியிட்டு காத்திருக்கும்
மணாளனின் மனக்கண் தான்
தவிப்பின் தவமிருப்போ

வேலைக்காய் வெளிநாடு
வேணிலே போன வெய்யோன்
வெயில் நேர பகலினிலே
பக்குவமாய் பட அழைப்பு
பாய்ந்து வராமல் இருக்கையிலே
தவிப்பினில் தவித்திடும் மனைவியின்
மனத்தின் சஞ்சரிப்பு தான்
தவிப்பின் நச்சரிப்போ

தவிப்பதனின் வலியுரைக்க
வழியெனக்கு விதியில்லை
வளியாடும் நாணல் போல்
தவிப்பதனை நாடிடுவீர்

கவிஞர் பி.வூட்ஷன், முல்லைத்தீவு(இலங்கை)

# வாழ்வு மலரட்டும்

நீதி உயர்ந்து அநீதி அழியட்டும்
திறமையுடன் மோதி பணம் வீழட்டும்
ஒற்றுமை பிறந்து சூழ்ச்சியை தகர்க்கட்டும்
உதவி புரிந்து வீழ்ச்சியை குறைக்கட்டும்
தனிமையை ஒழித்து கூட்டாக வாழட்டும்
மனித வாழ்வு இனிதே மலரட்டும்



கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# பார்வைத் தீண்டலில் பாவையும் மலர்ந்தேன்



உயிரில் கலந்தவனே
உணர்வினில் உறைந்தவனே
கனவினில் வந்தவனே
காரிகையின் காதலனே

நேரினில் கண்டதுமே
நெஞ்சமும் நெகிழ்வானதே
சிறுபுன்னகை பூத்திட
சிதறித்தான் போனேனே

அரும்பு மீசையும்
ஆசைதனைத் தூண்டுதே
இருகரங்கள் நீட்டியே
இதமாய் அணைத்திடு

முத்திரைப் பதித்திட
கன்னமும் சிவக்கிறதே
இதமான அரவணைப்பில்
மேனியும் சிலிர்த்திடுதே

இனிமையின் இளவலே
இதமானது தழுவலே
இளமை ராகமது
நித்தமும் இசையானதே

பார்வைத் தீண்டலில்
பாவையும் மலர்ந்தேனே
உள்ளம் குளிர்ந்திட
உவகைப் பூத்தேனே

என்னுயிர் கண்ணாளனே
நீங்காமல் இருந்திடு
உணர்வாகியே நெஞ்சத்தில்
மஞ்சம் இட்டிடு

நிழலாய்த் தொடர்கிறேன்
உந்தன் நினைவுகளிலே
காலமெல்லாம் காத்திடு
ஆதரவில் கனிந்திடுவேனே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மிதிவண்டி

மூச்சுக் காற்று நிரம்பிய உனக்கோ
மூச்சு வாங்குவதே இல்லை!
சங்கிலித் தொடராய் வலம் வரும்
சக்கரங்களுக்கு சலிப்பதே இல்லை!
உன்னை மிதிப்பவரையும்
முன்னேறிச் செல்லவே துணை நிற்கின்றாய்!

பெட்ரோல் டீசல் குடிக்கும் குடிகாரன் இல்லை நீ!
காப்பீட்டு உரிமத்தில் வாழ்பவனல்ல நீ!

தலைக்கவசத்தை எண்ணி
உன் தலைமுறை தவித்ததில்லை!
உன் மணியோசைக்கு மயங்காத மானிடரில்லை!
சின்னஞ்சிறு குழந்தைகள் ஒருநாளும்
உன்னை மறப்பதில்லை!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# நெஞ்சில் மாமழை

அம்மாவின் பாசம் மகளுக்கு
நெஞ்சில் மாமழையானது
அப்பாவின் அரவணைப்பு
விரல் பிடித்து நடக்கையில்
என் மனம் நெஞ்சில் மாமழையானதே
இயற்கையை ரசிக்கும் தருணம்
இரவில் வானத்து நிலா
ஒளி வீச வெளிச்சத்தின் நடுவே
கண்களுக்கு குளிர்ச்சியாய் ஊரோடு
கதை பேசி மகிழ்ந்த தருணம்
நெஞ்சில் மாமழையானதே
கவலைகள் மறந்து இன்பத்தில் திளைக்க
நட்புகளோடு மனம் விட்டு
பேசும் போது மனம் நெஞ்சில் மாமழையானதே
படித்து பல பெற்று
நல்ல வேளையில் சேர்ந்து
கை நிறைய சம்பாதிக்கும் தருணத்தில்
பத்து மாதம் சுமந்து பெற்ற
தாயின் கருவறை நெஞ்சில் மாமழையானதே
அன்பான வார்த்தை பேசி
யார் மனதையும் புண்படுத்தாத நேரம்
நல்லோர் வாழ்வில் நெஞ்சில் மாமழையானதே
காதலன் காதலை சொல்கையில்
காதலியின் நெஞ்சம் நெஞ்சில் மாமழையானதே
கள்ளமில்லா குழந்தையின் முகம்
சில்லறையாய் சிரிப்பொலியில் சிரிக்க
உலகமே நெஞ்சில் மாமழையானதே



கவிஞர் ம.செ.அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# வாழ்வு மலரட்டும்

இன்னல் துன்பங்கள் இதயத்தை வாட்டிட
இரவும் பகலும் இருளாகவே தெரிகின்றன

காலையும் மாலையும் கடமையில் கருத்தூன்றிட
நேரமும் பொழுதுகளும் மனவுளைச்சலில் அடைக்கலம்

அலைந்து திரிந்து அல்லல்பட்டு உழைத்தாலும்
அரிதாகவே கிடைக்கிறது தேவைக்கேற்ற வருமானம்

எண்ணித் துணியும் கருமங்கள் கூட
எண்ண வோட்டத்தை அலைக்கழிக்க வைக்கின்றன

உழைக்கும் வர்க்கத்தின் வியர்வைப் பெருமூச்சு
உயர்வு தாழ்வின்றியே உதிரமாக வடிகின்றது

புலரும் விடியலுக்குள் ஏக்கங்கள் புதைந்து
கொடியாய் செடியாய் படர்ந்து செல்கின்றன

உள்ளம் மகிழ்ந்து உணர்ச்சிகள் துளிர்த்தே
உறவுகளைப் பிணைத்து உறவாடுவது எப்போது

புதியன புகுந்து பூமியில் தழைத்து
மலர்ந்திடும் வாழ்வு என்றுதான் உதயமோ



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹார், இலங்கை

# நிலாமுற்றம்

பெரியவர்களின் சொற்களால்
நிறைந்து நின்ற

நிலாமுற்றங்கள் இன்று
அலைபேசி குப்பைகளின்
கழிவுகளாய்



தாத்தா பாட்டி கதைகள்
சொன்ன நிலா காலங்கள்

இணையத்தின் ஆரவாரத்தில்
கிழிந்த பக்கங்களாய்

கூட்டு குடும்பமாக நிலாச்சோறு
உண்ட நினைவுகள்

இன்றைய அடுக்குமாடி குடியிருப்பின்
வாசலில் தேய்பிறையாய்

நிலவில் பாட்டி சுட்ட வடை
ஊசிப்போனது இணைய உலகில்

நிலவும் தொலைந்தது
நினைவுகளும் தொலைந்தது
பௌர்ணமி மட்டுமே இன்னும் மிச்சங்களாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தன்முனைக் கவிதைகள்



1
பக்கத்தில் இருந்தால்
பத்தோடு பதினொன்று
பிரிவும் வேண்டும்
பெருமை தெரிவதற்கு

2
ஒருநாள் விடுமுறை
ஏகாந்த ஓய்வு
எப்போதும் இல்லை
அடுக்களைப் பெண்களுக்கு

3
கதவினைத் திறக்க
காற்று உள்வரும்
உள்ளத்தைத் திறக்க
உள்ளன்பு வெளிவரும்

4
கண்களை விட்டும்
கலைந்திடும் காட்சி
காலத்தால் நிலைபெறும்
கலந்திட்ட நினைவு

5
கூரையைப் பிய்க்காத
கொடையே வேண்டும்
கோவிறையே இல்லை
கூடொன்று எங்களுக்கு

6
உள்ளே காயங்கள்
அறியாதார் திமிரென்பார்
இதழ்களைத் திறவேன்
மௌனமே என் வழி

7
கடந்து செல்கையில்
நடக்கும் சம்பவங்கள்
கற்றுக் கொள்ளவே
நல்ல பாடங்கள்

8
நிந்தித்து வாழ்ந்தால்
நிம்மதி இல்லை
சிந்தித்து நடந்தால்
சீர்மை பெறுவாய்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# எனக்கு உயிர் பிச்சை மட்டும் கொடு

உன் காந்த விழி பார்வையில் அழகில்
கள்ளிப்பூ  முதல் அல்லிப்பூ வரை
அனைத்து பூக்களும்
தற்கொலை செய்து கொண்டது
அதை விசாரிக்க வந்த என்னையும்
உன் பார்வையால்
எனக்கு உயிர் பிச்சை மட்டும் கொடு
உன்னை விசாரிக்காமல் விட்டுவிடுகிறேன்.



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# தன்முனைக்கவிதைகள்

வயல்களில் பசுமை
கண்களைக் கவரும்
வளர்ந்து செழித்திட
வயிறும் நிரம்பும்

வறட்சி பெருகிட
நிலமும் வெடிக்கும்
மழையும் குறைத்திட
பஞ்சமும் பிடிக்கும்

கழிவு நீர்
நகரைச் சுற்றும்
பெருகும் நுளம்பில்
உயிர்களும் போகும்

மரங்கள் வளர்த்து
இயற்கையை இரசிப்போம்
பழங்கள் பறித்து
பசியையும் போக்குவோம்

பருகும் நீரில்
பக்குவம் வேண்டும்
பரம்பரை காத்திட
சிக்கனம் உதவும்

வானத்து நிலவு
நினைவினை மீட்டும்
திசைமாறிச் சென்றிட
வழிகளையும் காட்டும்



போதை புகுந்திட
புத்தியும் போகும்
குடும்பம் குலைந்திட
வழியும் சொல்லும்

துரித உணவுகள்
வாங்குவது இலகு
நோய்கள் வரவழைத்து
இறப்பையும் தருமே

குவியும் குப்பைகள்
நோய்களை வரவழைக்கும்
விழிப்புணர்வு மறந்திட
தேசமே பிணியாகும்

பாலாற்றுப் பரிசல்
____&__&___&__&__&__

பாலாற்றுக் கரைகயில்
பரிசல் அழகு
தனித்து சென்றிட
மனதிற்கு மகிழ்ச்சி

கவிஞர் சேஹூ மொஹம்மது பௌரோஸிரா, இலங்கை

# கவிதைகள்

இருளில் நடமாடுகிறார்கள்
திருடர்கள் சுதந்திரமாக
நிழல்கள்

கண்களுக்கு தெரியாத காற்று
திருடிக் கொண்டு வருகிறது
மலரின் வாசனையை

எங்கிருந்த வாசனையையோ
தனக்குள் பதுக்கி பரிசோதித்து பார்க்கிறது
மூக்கு

பதற்றமான பயணத்திலும்
துணையாக செல்கிறது
தொலைப்பேசி



ஓடும் நீரில்
மிதந்து செய்கிறது
மேகங்கள்

இருளை அகற்றிக்கொண்டு
கீச்சல் தருகிறது
பிள்ளையின் அழுகை

விரித்து வைத்த குடை
யாருமே கண்டுக்கொள்ள வில்லை
காளான்

முறிந்த கிளையிலிருந்து
சடடென்று விடுகிறது
குருவின் கூடு

நிறமாறிய சட்டை
நியாபகம் ஊட்டுகிறது
தந்தையை

வெளிச்சத்தில் செல்வோருடன்
பின்னோடு செல்கிறது
நிழல்

வீசும் காற்றில்
கலக்கப்படும் இரசாயனம்
புகை

மேளதாளம் ஆரம்பித்ததும்
பாடல் இசைக்கிறது
மழைக்காலம்

ஓடி ஓடி ஓய்ந்ததில்
கலைத்த கலைப்பு தெரிகிறது
மழை

தள்ளாடும் தாத்தாவை
தாங்கி பிடிக்கிறது
ஊன்றுகோல் (தடி)

அடித்து வளர்த்ததால்
பரிசளிப்பு கிடைக்கிறது மகனுக்கு
பட்டமளிப்பு

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், இலங்கை

# சாய்வு நாற்காலி

மாமரத்துக் குழாய்
அதன் பெயர்.

தண்ணீரின்
தரிசனத்திற்கு
அம்மாவின்
தினசரி பாதயாத்திரை
மைல்களாக நீளும்.

வாய் நெளிந்த
பித்தளை பாத்திரம்
உறுமாவின் மீது
நேர்த்தியாக
அமர்ந்திருக்கும்.

இடுப்பில் குடம்
இல்லாமல் இருந்தாலும்
சாய்வு நாற்காலியாய்
தெரிவாள்.



தெருக் காக்கையின்
இறப்பை கூட
பதிவு செய்யும்
திண்ணைப் பாட்டிகள்
சேதி சொல்ல,

அம்மா பாயாசம் வைத்தாள்.
முக்கிய பிரமுகர்களாய்
பெரிய பெரிய இயந்திரங்கள்
மண் பிளக்க
ஊரே வாய் பிளந்தது.

பாறை பூமியாம்,
இயலா இயந்திரங்கள்
பின்வாங்க
பிரச்சாரம் ஓய்ந்தது.

மீண்டும்,
மாமரத்து குழாய் நோக்கி
பயணப்பட்டன
நிமிர வழியில்லா
சாய்வு நாற்காலியும்
நெளிந்த பானையும்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# இவன் இவனை எழுதுகிறான்

இவன் இவனை எழுதுகிறான்
ஒரேநாளில் எழுதிவிட இது என்ன
வலிதந்தவர் பெயரா? இல்லை வெற்று வாக்கியமா?
வாழ்க்கையாகிற்றே ஒவ்வொரு நொடியும் நின்று
நிதானிக்கிறான் நினைத்து நினைத்து மகிழ்கிறான்
பின் அழுகிறான் தொடர்ந்து எழுதுகிறான்
முடிந்தபாடுதானில்லை.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# ஆசை பெருகுதடி

வண்ணம் குழைத்து
வரைந்தது யாரோ
வான் முற்றத்திலே

எண்ணம் போகுதே
திசையெங்கும் ஊர்வலம்
விடியலின் வீச்சில்



மீட்டும் இசை பேரழகே
மிஞ்சுவது சாந்தமன்றோ
முண்டாசு கவிஞனே
விட்டு சென்ற வரிகளெல்லாம்
எட்டிஎட்டிப் பார்க்குதே

ஊடலுக்கு வழியுமில்லை
உள்ளமின்று இனித்திருக்க
பார்வை சென்று பார்க்கையிலே
மறைத்து வைக்கும் மாயமென்ன

கட்டி வைத்த கற்பனையும்
கட்டவிழ்ந்து கொட்டுதடி
மெய்மறந்து போகுதே
மீட்டுகின்ற மெல்லிசைக்குள்

என்னடி தோழியிது
ஏகாந்தம் வீசுதடி
கண்சிமிட்டிய கள்வனை
காணாத ஏக்கமடி
தினம் காண்பது ஏனோ

மனதுக்கு இதமடி

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# கனவு கூட சுகம்தான்

நீச்சல் குளத்தோட கப்பல்போல என் வீடு
வாசலிலே மகிழுந்து; வீடெல்லாம் தரை விரிப்பு
விதவிதமான இருக்கைகள்.

குளிர்சாதனம் பொருத்தப்பட்ட குட்டி அரண்மனை
வெளியிலே அலைந்துவிட்டு வீட்டுக்குள்ளே நுழைந்தாலே
சில்லென்ற சுக உணர்வு கண்ணெல்லாம் சுத்துது.

பிள்ளைகளின் கூச்சலும் கும்மாளமும் எரிச்சலான மனநிலை
படுக்கையில் தாழ்போட்டு பஞ்சு மெத்தையில்
ஒய்யாரமாய் நான் உறங்க; நான் கூட ராஜா தான்
மனமெல்லாம் மகிழ்ச்சிதான்.

உடலெல்லாம் பன்னீராய் படபடவென நீர் தெளிக்க
தூக்கம் பறந்து ஓட உடலெல்லாம் தண்ணீரு.

ஓட்டை குடிசையில ஒழுகுது மழை நீரு
வாசலுக்கே வந்துவிட்ட ஆறு போல மழை தண்ணி.

மழை நீரில் பிள்ளைகள் காகிதகப்பல் விட்டு
கொண்டாட்டமாய் விளையாட
உண்மை நிலை அறிந்து கண்ணெல்லாம் கண்ணீரு.



ஆனாலும் நான் கூட கனவினில் கொஞ்ச நேரம்
ராஜாவா வாழ்ந்திருந்தேன்.

என்ன போல ஏழைகளுக்கு கனவுகூட சுகம்தான்
கனவு நிஜமாக காலமெல்லாம் உழைக்கிறேன்.

கனவு மட்டும் இல்லேன்னா என்ன போல மனிதர்களுக்கு
வாழ்க்கையே வெறுமை தான்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், தேத்தியாதோப்பு

# நல்ல மாணவன்



நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமே
விளையும் பயிர் முளையிலேயே தெரியுமே
ஈடில்லா முயற்சியுமே, பயிற்சியுமே
நல்மாணவனுக்கு வித்தாகுமே
பள்ளத்தை நோக்கியே தண்ணீர் ஓடுவதை போல
உன் அறிவையும் அப்படியே பயணித்து விடு.
கல்வி கற்பதன் மேன்மையை உணர்ந்து
அதை நோக்கியே நல்ல மாணவன் போவானே!
ஏற்றமிகு வாழ்வுதனை வாழ
கல்வியே மாணவனுக்கு அச்சாணியே!
எவற்றையேனும் பற்றிக் கொண்டாவது
பூங்கொடி படர்வது போல மாணவன் தன்னை உயர்த்தி
பிறரையும் உயர்த்தவே நன்கு படிக்கத்தான் வேண்டுமே!
ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.
மாணவர்கள் சிந்தையை சிறகடிக்க விடாமல்
தம் மனதை குப்பை மேடாக மாற்றாமல்,
கோபுர கலசமாக மாற்ற நிறைய உழைக்க வேண்டுமே!
இப்பிரபஞ்சங்கள் நமக்காக பல நல்ல விஷயங்களை
வாரி வழங்கிக் கொண்டே இருக்கிறது.
இன்றைய மாணவன் நாளை வருங்காலத்து தலைவர் ஆவானே!
தேவைகளை சுருக்கி சிக்கனத்துடன்
வாழ கற்றுக் கற்றுக் கொண்டால்
பொற் குவியல் என்ற பெட்டகம் உங்கள் கண் எதிரே!
அதன் சாவி உங்கள் கையிலே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

அன்பிலிருந்து
அதட்டல் வரை
அனைத்துமாய் நின்று
அரவணைப்பவர் தான்
அம்மா!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# இலக்கெனும் விளக்கு

இலக்கெனும் விளக்கொன்று வேண்டும் வாழ்வில்
இல்லாதோர் எதிர்காலம் இருளாகும் தொய்வில்
உனக்கென ஓர் இலக்கை உருவாக்கும்
உனக்குள்ளே அதை இன்றே கருவாக்கு
கற்பனையில் கண்டதெல்லாம் கையில் வரும்
கடின உழைப்பு ஒன்றே தீர்வு தரும்
உதவிக்கு எவரையும் எதிர்பார்க்காதே
உன்னால் முடியும் என்பதை மறக்காதே
குழப்பத்தில் உள்ளே தான் தெளிவு ஒளிந்திருக்கும்
உன் சிந்தையை குழப்பினால்தான் சீக்கிரம் உருவெடுக்கும்
நேற்றைய நிகழ்வை நெஞ்சத்தில் வைக்காதே
நாளை நினைத்து நடுக்கம் கொள்ளாதே
இன்றைய நொடியில் பிடியை இருக்கு
நடை போடு துவங்கும் உந்தன் இலக்கு
வந்ததால் வழியின்றி வாழ்வதல்ல வாழ்வு
சென்றாலும் சரித்திரம் நம்மை பேசுவதே மகிழ்வு
இலக்கினை எழுத்தால் எழுதி வைத்துக் கொள்
எந்த சூழல் வந்தாலும் நேர்வழியில் நில்
நாளைய சரித்திரம் உன் பேர் சொல்லும்
தெளிந்த இலக்கு ஒன்றே என்றும் வெல்லும்



கவிஞர் அ. தினசேகரன், அருள்வாடி (விழுப்புரம் மாவட்டம்)

# இருசொல் தாராயோ

இடஞ்சலான வாழ்விலே
இளையவளான எனை சுமந்தாய்
இடரும் பல நீ பெற்றாய்
இருக்கின்ற செல்லமும் எனக்கே

இல்லையென்று சொல்லாமலே
இதுவரை எனக்களித்தாய்
இறுதிவரை உன் பாசத்துக்குரியவளாக
இருக்கவேண்டுமென நினைத்தேனே

இடையில் நுழைந்த காதலுமே
இடைவெளியாக்கியதே இருவரையும்
இன்பத்திற்காக இணையவில்லை
இன்னல் துடைத்திடவே

இல்லம்விட்டு உன்னை விட்டு
இமைதெரியா தூரம் வந்தேனே
இமைமூடும் நேரமெல்லாம்
இதழ் புன்னகையோடு நீ வந்தாய்

இடரில்லாமல் நீ இருந்திடுவாய்
இளையமகள் நான் நினைத்தேன்
இசையாக மகிழ்ந்த வாழ்வுமே
இதமில்லா இசையானது

இட்டு நீ கற்றுகொடுத்த வாழ்வியல்
இதிகாச பாடங்களால்
இதுவரை பெயர் பாராட்டோடு
இருக்கின்ற இடத்திலெல்லாமே



இனமான பேச்சாக மகிழ்ந்தேனே
இவ்வளவும் கொடுத்த நீ
இழிவாக என் மணத்தையெண்ணி
இடிந்த கோபுரமாய் சரிந்தது ஏனோ?

இதுவரை புரியாத புதிரானதே
இவையெல்லாம் ஏன் செய்தேன்?
இருந்து சுமந்த உன் மனது அறியவில்லையா?
இரு ஏழு ஜென்மம் உன் மகளாக

இருகரம் கோர்த்தே
இதயக்கோவிலில்
இருந்து உன் ஆசையை
இறுதிவரை நிறைவேற்றுவேன் தாயே

இத்தனை கேட்டும் எனை மன்னிப்பாயா
இறைவனிடமே கேள் நியாயத்தை
இந்த நிலை ஏன் என்று
இதுமாற என்ன செய்ய

இருசொல் தாராயோ
இவள்தான் என் மகளென்றே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்சூர்

## ஆண்டாள். 028

## நாச்சியார் 10வது திருமொழி

### கார்க்கோடல் பூக்காள் 110= 010 முதல் 1-5= 005

ஆண்டாள்தன் வாழ்வினுக்கு எம்பெருமான் கூடலொன்றே
வேண்டுவதால் பலபுட்கள் மேகங்கள் காமனென
பலரையுமே சரணடைந்தாள்! வாராமை அதனாலே
அவனனையன கண்டுயிர்க்க முயற்சித்தாள்! கார்க்கோடகப்
பூத்திரட்டு திருமேனி அவயவங்கள் நினைவூட்டும்!
சேராமை துன்பினையே சேர்த்திடுமே!அவர்ரக்ஷிக்கும்
சுதந்திரனே! இரக்ஷிக்கா நிலையெனினும் பெரியாழ்வார்
குடிப்பிறப்பே திருவடிசேர் நம்பிக்கை தன்னாலே
ஆத்துமத்தை நிலைநிறுத்தி கொண்டனளே! தொண்டர்களின்
துணையொன்றே பெருமானின் துணைசேர்க்கும் என்றுணர்ந்தாள்!
முதலாவது பாசுரத்தே கோதையொடு போரிடற்கு
கார்வண்ணக் கண்ணனவன் கருங்காந்தள் பூக்கள்தமை
ஏவினதால் எங்குளனோ? முறையிடுதல் யாரிடமோ?
துழாய்மாலை திருமாலை இச்சித்து ஓடுநெஞ்சினள்!
இரண்டாவது பாசுரத்தே உயரத்தே பூத்துள்ள
காந்தள்மலர் தனைப்பார்த்து பரமபத சத்புருஷன்
கையாழி அதுபோன்று எரிக்காது தனிப்படுத்து!
அதுபிரிவினும் மேலதுவே!என்றவுரை சாற்றுகிறாள்!
மூன்றாவது பாசுரத்தே ஆண்டாளோ மேற்புறத்து
பார்வைதனை கீழிறக்கி கோவைக்கொடி நோக்கியதன்
பழங்களெலாம் எம்பெருமான் அதரத்தை நினைவூட்டி
அச்சுறுத்தலால் பாவியென வெட்கமிலாள் தானென்று
எம்பெருமான் திருநாவும் அனந்தாழ்வான் நாவேபோல்
பிளவுண்டு இருகூறு ஆனதுவோ எனவருத்தம்
கொண்டனளே! நான்கினிலே பார்வையைத் திருப்பினளே!
முல்லைக்கொடி அடர்பூக்கள் எம்பெருமான் முத்துப்பல்
வரிசையென துன்புறுத்தும்! சரணடைந்தேன்!பொய்வாழ்வு
இல்லாதே காத்திடவே வேண்டுகிறாள்!ஐந்தினிலே
எம்பெருமான் கூடுவனேல் குயில்பாடல் இனிதாகும்!
கூடானேல் கத்தலதே! அரங்கனொடு சேர்க்கையதே
இலக்காகும்!முதலைந்து நற்சுவையே! மற்றைந்து
தொடர்ந்திடுமே! கோதைதமிழ் பாருசித்து மகிழ்வோமே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# பத்தமடை பாய்

பத்தமடை பாய்களை மொத்தமாய் வாங்கிவந்து
சுத்தியுள்ள ஊர்களிலே விற்பனை செய்கின்றேன்!
சுத்திவர ஒத்துழைக்கும் இருசக்கர வாகனத்தில்
பெத்தெடுத்த குழந்தைக்கும், சித்தம்கவர் மனைவிக்கும்
மெத்தென்ற பாய்களின்மேல் இடமளித்தேன் என்முன்னே!
எத்தனை துன்பங்கள் எதிர்வந்த போதினிலும்
ஒத்துழைக்கும் துணையிருக்க நிம்மதியாய் வாழ்கின்றோம்!
அத்தனே ! அருள்புரிவாய்! எம்வாழ்வு உயர்வடைய!



பட உதவி நன்றி: நம் உரத்தசிந்தனை

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# அப்பாவின் குரல்

என் அப்பாவின் கனவுகளை
பெரும்பாலும் நானே காண்கிறேன்.

அவர் சிந்தித்து செய்ததை
நான் சிந்திக்காமலே செய்கிறேன்.

அறிவுறுத்தவோ கண்டிக்கவோ
ஆள் இல்லாத போது,

காலம் சொல்லும் கடைசி தருவாயில்
அப்பாவின் குரல்.

’சொன்னது புரிந்ததா’



கவிஞர் ஞா. மணிமாறான், இரெட்டியூர்

# எங்கே என் கனவுகள்?

## நூல் அனுபவம் (புதுக்கவிதைகளின் பூங்கொத்து)

"கவிமாமணி" இரஜகை நிலவன்
மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்ற வெளியீடு

சொல்லாமலே நான் கேட்கிறேன்

கவிஞர் வரவேற்பு மடல்

கவியினில் முதிற்சிபெற்ற
கவிப் பெருந்தகையீர்
அணுவணுவாய் இதயத்தின்
மனக்கருத்துக்ளை உணர்ந்தறிந்து

கவிச்சரமாய் படைத்திட
திரண்டுவந்த கவியுருவே
யான் மனந்திறந்து
உமக்களிக்கும் மாசறுநல்

வரவேற்பு மடலிதுவே
வருக! வருக!
இதயமதில் கற்பனையை
இதமாய் சுமந்தே

கவிக்களம் புகுந்து
கவியமுது சுரந்திட
சொல்லாமலே வந்த
எந்தன் கவியுறவே

நில்லாமலே வந்த
கவித்தென்றலே வருக
சொல்லாடலுடன் கருத்துக்களை
செம்மையாய் பகிர்ந்திடும்

கவிச்சிகரமே கவியமுதே
வருக வருக மகிழ்ந்தே வருக!

கவிஞன் ஸ்ரீ
**********



அருமையான கவிதை

ஏற்றுக் கொள்ளாத
வரவின் வலிகளோடு
வரங்களும் சுகமே.

மிக அழகிய வரிகள் ஐயா அருமையான கவிதை
வாழ்த்துக்கள்

பானுமதி இராஜேந்திரன்
*******************

மனதில் உறுதி வேண்டும்
மனமே.
துணிவை நெஞ்சத்தில் நிறுத்து
இயலாமையை தூரத்தில் விரட்டிடு.
வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பாய்.

அழகான கவிதை கவிஞரே. வாழ்த்துகள்.

கவிஞர் இரா சங்கர் வளர்மதி

# அரசன் சண்முகனார்

## கட்டுரை

### பிறப்பு, கல்வி



மதுரை மாவட்டத்தில் உள்ள சோழவந்தான் என்னும் ஊரில் செப்டம்பர் 15, 1868 அன்று அரசப்பிள்ளைக்கும் பார்வதியம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இயற்பெயர் சண்முகம். தந்தை பெயரிலிருந்து 'அரசன்' என்ற சொல்லை எடுத்து தன் பெயருக்கு முன்னால் வைத்துக் கொண்டதால் "அரசன் சண்முகனார்" என்று அழைக்கப்பட்டார்.

12 வயது வரை ஊர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அழகர்சாமி தேசிகரிடம் படித்தார்.பதினான்காம் வயதில் ஆசிரியருக்காக 'சிதம்பர வினாயகர் மாலை' என்னும் சிறு நூலை பாடினார். பதினாறு வயதில் தந்தை காலமாகவே கல்வி நின்றது.

### தனி வாழ்க்கை

1885-ம் ஆண்டு காளியம்மாளை மணம் புரிந்தார். சிறிதுகாலம் வேளாண்மைத்தொழில் செய்தார். 1890 முதல் 1902 வரை மதுரை சிம்மக்கல் சேதுபதி பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். தலைமை ஆசிரியர் நாராயண ஐயர் தமிழ்ப்பாடத்திற்கான பாடவேலையை குறைத்ததால் தன் பணியைத் துறந்தவர், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் தொடங்கப்பட்ட சேதுபதி செந்தமிழ் கல்லூரியில் ஆசிரியராக சேர்ந்து 1906 வரை பணியாற்றினார். எப்போதும் நோயும் வறுமையும் கொண்டிருந்தார். பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாருக்கு தொல்காப்பியம் கற்பித்த ஆசிரியர் இவர். பண்டிதமணி இவருக்கு பொருளுதவி செய்திருக்கிறார்.

### இலக்கிய வாழ்க்கை

விவேகபாநு இதழாசிரியர் மு.ரா.கந்தசாமி கவிராயருடன் உருவான தொடர்பால் இலக்கிய ஆய்வுக்குள் நுழைந்தார். 'மாலைமாற்று மாலை' என்னும் நூலை இக்காலகட்டத்தில் எழுதினார். இது இறுதியில் இருந்து தொடக்கம் வரை படித்தாலும் பொருள் மாறுபாடு அளிக்காத வகை செய்யுள்.

தொல்காப்பியப் பாயிர விருத்தி, திருக்குறள் ஆராய்ச்சி என்ற அவரது இரண்டு நூல்களும் எதிர்ப்புக்குள்ளாகின. அவற்றை தடைசெய்ய வேண்டும் என்று புலவர்கள் கோரினர்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# அரசன் சண்முகனார்

## கட்டுரை

### இலக்கிய வாழ்க்கை


இவரது வாழ்நாளில் பெரும்பகுதி தொல்காப்பிய ஆராய்ச்சியிலேயே கழிந்திருக்கிறது. 1900-ல் தொல்காப்பியத்திற்கு புதிய உரை எழுதத் தொடங்கினார். எழுத்ததிகாரத்தில் பாயிரம், நூல் மரபு, மொழி மரபு ஆகிய மூன்றுக்கும் உரை எழுதினார். இதன் பிறகு அப்பணியைத் தொடர முடியாத அளவுக்கு அவரது உடல்நிலை மோசமானது. எழுதியவற்றிலும் பாயிர விருத்தி மட்டும் அச்சில் வந்தது. அந்நூலில் மேற்கோள் கூறப்பட்ட நூல்களே ஐம்பது உள்ளன. இதில் நச்சினார்க்கினியர், இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்களையும் நன்னூலாரையும் மறுத்துச் சொல்கிறார். முக்கியமாக, இவர்கள் சொற்களை விளக்கும் பகுதிகளில் மறுதலிக்கிறார்.

### நூல்கள்

இந்த நூல்கள் தவிர முருகனைப் போற்றி பாடப்பட்ட ஏகபாத நூற்றந்தாதி, மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடி மாலை, திருவடிப்பத்து போன்ற சிறு கவிதை நூல்களையும் இயற்றியுள்ளார். சைவ சித்தாந்தப் பற்றின் காரணமாக சைவத் தலங்களைப் பாடுதல், தீவிர விவாதத்திற்குரிய சைவ ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுதல் ஆகியவற்றை மேற்கொண்டார். அவரது 'அன்மொழித் தொகை' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை செந்தமிழ்ச்செல்வி இதழில் வெளிவந்தபோது தமிழறிஞரிடையே எதிர்ப்புக் குரல் எழுந்தது.

### படைப்புகள்

- சிதம்பர விநாயக மாலை
- மாலை மாற்று மாலை
- ஏக பாத நூற்றந்தாதி
- இன்னிசை இருநூறு
- மதுரை மீனாட்சி அம்மன் சந்தத் திருவடிமாலை
- திருவடிப் பத்து
- நவமணிக் காரிகை நிகண்டு
- வள்ளுவர் நேரிசை
- இசை நுணுக்கச் சிற்றுரை
- தொல்காப்பியப் பாயிர விருத்தி
- திருக்குறள் ஆராய்ச்சி
- திருக்குறட் சண்முக விருத்தி



படைப்புகள்

- சிதம்பர விநாயக மாலை
- மாலை மாற்று மாலை
- ஏக பாத நூற்றந்தாதி
- இன்னிசை இருநூறு
- மதுரை மீனாட்சி அம்மன் சந்தத் திருவடிமாலை
- திருவடிப் பத்து
- நவமணிக் காரிகை நிகண்டு
- வள்ளுவர் நேரிசை
- இசை நுணுக்கச் சிற்றுரை
- தொல்காப்பியப் பாயிர விருத்தி
- திருக்குறள் ஆராய்ச்சி
- திருக்குறட் சண்முக விருத்தி
- நுண் பொருட் கோவை

இறுதிக்காலம்

45 வயதுக்குப் பிறகு தொடர்ந்து வாதநோயால் துன்புற்றார். ஜனவரி 11, 1915 அன்று சோழவந்தானில் காலமானார்.



நாளை நமதே

# தயக்கம்

# மிகப்பெரிய தடை.

# அது எத்தனை திறமையையும்

# தன் சிறிய நூலில் கட்டிவிடும்

அகமும் தமிழே
முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com